# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


ஆண்டு: 7 திகதி: 26.11.22

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. மஞ்சு விஜயகுமார்

மாணவர் பெயர்: ________________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 15 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

– BLANK PAGE –

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

1. பின்வரும் பந்தியை வாசித்து கீழே கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்

பாஞ்சாலங்குறிச்சியில் பூஞ்சோலைகளும், சந்தன மரச் சோலைகளும், ஆறுகளும், நெல் வயல்களும் கமுகந்தோப்புகளும் நாட்டிற்கு அழகு சேர்த்தன. இங்கு பல சுற்றுகளாகக் கோட்டைகள் காணப்பட்டன. அவை மதில்களால் சூழப்பட்டவையாக மிகவும் வலிமையாகக் கட்டப்பட்டிருந்தன.

பாஞ்சாலங்குறிச்சியில் வீடுகள் தோறும் மணிகளால் அழகு செய்யப்பட்ட மேடைகள் இருந்தன. பல வீடுகள் மதில்களால் சூழப்பட்டும், ஒரு சில வீடுகள் மாடி வீடுகளாவும் காணப்பட்டன. வீட்டுக் கதவுகள் மிகவும் நேர்த்தியாகவும் அலங்காரமாகவும் அமைக்கப்பட்டிருந்தன.

வீரம் மிகுந்த நாடாகிய பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள முயலானது தன்னைப் பிடிக்க வரும் வேட்டை நாயை எதிர்த்து விரட்டி விடும். பசுவும், புலியும் நீர் நிலையின் ஒரே துறையில் நின்று தெளிந்த நீரைக் குடிக்கும்.

பாஞ்சாலங்குறிச்சி என்னும் பாளையத்தின் அரசனாக வீரபாண்டிய கட்டபொம்மன் முடி சூடப்பட்டான். பாஞ்சாலங்குறிச்சி ஆங்கிலேயருக்கு திறை செலுத்த மறுத்ததால் ஆங்கிலேயர் போர் தொடத்தனர். இங்கு வீரத்திற்கு இலக்கணமாக விளங்கும் அரசனான வீரபாண்டிய கட்டபொம்மன், ஆங்கிலேயரின் அடக்கு முறையை எதிர்த்தும், தன் நாட்டில் விளையும் பொருட்களுக்கு வரி செலுத்த மறுத்தும் வீரத்துடன் போரிட்டான்.

கட்டபொம்மன் வெள்ளையர் கையில் அகப்படாமல் தனது நண்பரான விஜயரகுநாத தொண்டைமானின் புதுக்கோட்டை இராச்சியத்தில் மறைந்திருந்தபோது, நண்பனால் பிடித்துக் கொடுக்கப்பட்டு, 1799ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16ம் திகதி தூக்கிலிடப்பட்டான். தூக்கிலிடும்போது வீரமுழக்கம் செய்தவாறே தனது கழுத்தில் தூக்கு கயிற்றை மாட்டினான்.

இன்றும் வீரபாண்டிய கட்டபொம்மனின் உன்னதமான வீரமும், உயரிய தியாகமும் தமிழ்மக்களால் போற்றப்படுகிறது.

1. வீரபாண்டிய கட்டபொம்மன் ஆட்சி செய்த நாடு எது?

______________________________________________

2. பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை பற்றி எழுதுக?

______________________________________________

______________________________________________

______________________________________________

3. பாஞ்சாலங்குறிச்சிக்கு அழகு செய்யும் வளங்கள் யாவை?

4. கட்டபொம்மனின் ஆட்சியில் வீடுகள் எவ்வாறு இருந்தன?

5. எந்த பாளையத்தின் அரசனாக வீரபாண்டிய கட்டபொம்மன் முடி சூடப்பட்டான்?

6. ஏன் கட்டபொம்மன் ஆங்கிலேயருடன் போர் தொடுத்தான்?.

7. பின்வருவம் சொற்களைப் பிரித்து எழுதுக

   1. பூஞ்சோலைகள் = ……………………………………
   2. கமுகந்தோப்புகள் = …………………………………… (2 X 2 )=4

8. கட்டபொம்மன் ஆங்கிலேயரிடம் அகப்படாமல் எங்கு மறைந்திருந்தான்?

9. எந்த ஆண்டில் வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டான்?.

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

கீழே உள்ள சொற்ளுள் பொருத்தமானதைக் தேர்ந்தெடுத்து கோடிட்ட இடங்களை நிரப்புக

| | | | | |
|---|---|---|---|---|
| சிலப்பதிகாரம் | உதவுகிறது | துணையாக | நெகிழிச்சட்டை | வடிவம் |
| வெளியேறினர் | ஓய்வாக | வெள்ளம் | நூல் நிலையத்துக்கும் | ஹோம்புஷ் தமிழ் கல்வி |

நான் ஒரு தமிழ்க் காப்பியம். என் பெயர் ____________________ சேர நாட்டைச் சேர்ந்த இளங்கோவடிகளால் நான் உருவாக்கப்பட்டேன். புகழ்பெற்ற அச்சகத்தால் அழகான ____________________ பெற்றேன்.

என்னோடு பலர் உருவாக்கப்பட்டனர். அவர்களில் பலர் பாடசாலைக்கும், ____________________அனுப்பப்பட்டனர். நானும் நண்பர்கள் சிலரும் அவுஸ்திரேலியாவில் உள்ள ____________________நிலையத்துக்கும் அனுப்பட்டோம். அங்கு ஏழாம் ஆண்டு மாணவனான அறிவுச்சுடருக்கு ஆசிரியர் என்னை வழங்கினார்.

அறிவுச்சுடர் பாடசாலையின் மாணவர் தலைவன். பொறுப்புமிக்கவன். அவன் எனக்குப் ____________________போட்டு என் மேனி அழுக்காகாமல் பாதுகாத்தான்.

தமிழ்மொழி ஆசிரியர் கலையரசி தமிழ்மொழிப் பாடம் நடத்தும்போது, அறிவுச்சுடர் என்னைப் பயன்படுத்துவான். வீட்டில் ____________________இருக்கும்போதெல்லாம் என்னை வாசித்தும் பார்த்தும் மகிழ்வான். அவன் அறிவுப் பசிக்கு நான் ____________________ நின்று உதவினேன்.

ஒரு நாள் நாங்கள் வசித்த வீடமைப்புப் பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. வீடுகளில் ____________________புகுந்தது. அறிவுச்சுடரின் குடும்பத்தினர் உயிர் பிழைத்தால் போதும் எனக் கருதி தங்களுடைய வீட்டிலிருந்து ____________________. அறிவுச்சுடர் என்னை மறந்துவிட்டான். எனினும் என்னால் அவன் பெற்ற அறிவு அவனுக்கு இன்னும் ____________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |

கொடுக்கப்பட்டுள்ள படத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

**கொரோனா உயிர்கொல்லியை அழித்தொழிப்போம்**

விழிப்புணர்வு



அறிகுறிகள்



காய்ச்சல்

அறிகுறிகள்




உடல் சோர்வு



இருமல்



மூச்சுத் திணறல்



வீட்டில் இருத்தல்



முகக்கவம் (முகக்கவரிரை) அணிதல்




தனிமனித இடைவெளியைப் பின்பற்றுவோம்



சவர்க்காரத்தைப் பயன்படுத்தி கைகளைக் கழுவுவோம்

1 இப்படம் எதனைக் கூறுகிறது?

2 கொரோனா உயிர்கொல்லியில் இருந்து பாதுகாக்கும் வழிமுறைகள் யாவை?

3 கொரோனா நோய் தொற்றிய ஒருவருக்கு காணப்படும் அறிகுறிகள் யாவை?

4 கொரோனா நோய் தொற்றியவர் என்ன செய்ய வேண்டும்?

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

பின்வரும் சொற்களை வைத்து ஐந்து சொற்களுக்கு குறையாமல் வசனம் எழுதுக

1. விடுமுறை:-

2. தொழில்நுட்ப வளர்ச்சி:-

3. பாரம்பரிய உணவு

4. அப்துல் கலாம்:

5. இலட்சியம்:

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

நீங்கள் அண்மையில் கலந்து கொண்ட ஒரு திருமண விழாவைப் பற்றி, தாய்நாட்டில் உள்ள உமது நண்பருக்கு 60 சொற்களுக்கு குறையாமல் கடிதம் எழுதுங்கள் எழுதுங்கள்

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப்பற்றி 120 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.

1. நான் கொண்டாடிய தீபாவளித் திருநாள்
2. தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்ற வாணி விழா
4. என்னை கவர்ந்த சாதனை படைத்த தமிழர்